**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 05.02.2026**
**OS. No. 186/2024**
**வழக்கு சாட்சி PW.1–சாமிதுரை, த/பெ.காளியப்ப கவுண்டர்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 1, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**1, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) கோவில் குப்பாபிஷேகத்தை நிப்பாட்டுவதற்காக மாண்புமிகு மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தில் நானும், ராஜகோபாலனும் வழக்கு தாக்கல் செய்திருந்தோம் என்றால் நான் தாக்கல் செய்யவில்லை. யார் தாக்கல் செய்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இன்றும் ராஜகோபால் நீதிமன்றத்திற்கு வந்துள்ளாரா என்றால் வந்துள்ளார், அவர் அவருடைய வழக்கு ஏதேனும் இருந்திருந்தால் வந்திருப்பார், நான் என்னுடைய வழக்கிற்காக வந்துள்ளேன். அ.வ.எண்.291/1986 என்ற வழக்கை யார் தாக்கல் செய்து தீர்ப்பு பெற்றார் என்றால் என் பெரியப்பா பழனிசாமி அவர்கள் பெற்றதாகும்.

2) என் பெரியப்பா பழனிசாமிக்கு மொத்தம் மூன்று பிள்ளைகள், அவர்கள் பெயர்கள் பாலசுப்ரமணி, கோதண்டபாணி மற்றும் நாகராஜ் ஆகும். தற்போது மேற்படி நாகராஜ் தான் எங்கள் ஊர் கவுண்டர் என்றால் இல்லை, அவர் வெளியூரில் உள்ளார். ராஜகோபால் அவர்கள் கோவில் பணத்தை கையாடல் செய்ததாக ஊர் மக்கள் அனைவரும் சேர்ந்து ராஜகோபால் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றும், அந்த புகாரின் பேரில் நானும் காவல் நிலையத்திற்கு விசாரணைக்கு சென்றேன் என்றால் சரியல்ல, ராஜகோபால் தான் தன்னை தர்மகர்தா பதவியிலிருந்து வெளியேற்றியதாக கூறி புகார் அளித்திருந்தார்.

3) மேற்கண்ட விசாரணையில் கோவில்கம்பிகளை 50 கிலோ வாங்கிவிட்டு 500 கிலோ என்று ராஜகோபால் எழுதி முறைகேடு செய்ததால் காவல் நிலையத்தில் இனி வரும் காலங்களில் அவ்வாறு முறைகேடு செய்யமாட்டேன் என்று எழுதி கொடுத்தார்

என்றால் அவ்வாறு எதுவும் எழுதி கொடுக்கவில்லை. எங்கள் ஊரிலுள்ள மாரியம்மன் கோவிலுக்கு சுமார் எவ்வளவு வரி வரும் என்றால் சுமார் ரூ.13,00,000 கோவில் கும்பாபிஷேகத்திற்கு வந்தது. கும்பாபிஷேகத்தில் நான் கலந்துகொள்ளவில்லை என்றால் சரியல்ல, ஊர் கவுண்டர் என்ற அடிப்படையில் நான் கலந்து கொண்டேன். நான் கும்பாபிஷேகத்தை எடுத்து நடத்த கூடாது என்று கூறி துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் ஊர் பொதுமக்கள் சார்பாகவும், வரி வழங்கிய குடும்பத்தினர் சார்பாகவும் புகார் அளிக்கப்பட்டது என்றால் சரியல்ல, அவ்வாறு புகார் எதுவும் அளிக்கப்படவில்லை. (குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு 24.02.2026ம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.